**Sri S. RAMALINGAM** :—" கனம் சபாநாயகர் அவர்களே, போலீஸ் கமிஷனர் இந்த உத்திரவை போட்டிருக்கிறார். கல்வித் திட்டத்தை எதிர்த்தோ அல்லது ஆதரித்தோ பொதுக் கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் நடக்க இருக்கின்றன. ஆகையால் பொதுஜன அமைதிக்கு பங்கம் ஏற்படாத வகையில் தடுப்பதற்காக இந்த உத்திரவை மூன்று வாரங்களுக்கு போட்டிருக்கிறார். இதனால் எவ்விதமான கூட்டமும், ஊர்வலமும் நடத்தக் கூடாது என்ற தடையிருக்கிறது. இங்கு ஒன்று கூற விரும்புகிறேன். நாளைக்கு சர்க்கார் கல்வித் திட்டத்தை முடிவு கட்டி அறிக்கை வெளியிடப் போகின்றார்கள். அப்படி இருக்கும்போது கல்வித் திட்டத்தை ஆதரித்தும், எதிர்த்தும் பொதுக் கூட்டங்கள் போடுவதற்கு அவசியம் இல்லை. இதனால் மக்கள் தங்களுடைய குறைகளையோ, மற்றும் தங்களுடைய பிரச்னைகளையோ தீர்த்துக்கொள்வதற்கு முடியாமல் தடை போடப்பட்டிருக்கிறது. ஆகவே இந்த உத்திரவை ரத்து செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்."

**Sri M. KALYANASUNDRAM** :—" கனம் சபாநாயகர் அவர்களே, ஒழுங்குக்கு பங்கம் விளைவிப்பதற்காக யார் மீதாவது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றால், கனம் கல்வி மந்திரி அவர்கள் மீதுதான் நடவடிக்கை எடுத்தாக வேண்டும். ஏனென்றால், அமைதிக்கு பங்கம் விளைவிக்கும்படியான ஒரு திட்டத்தை கொண்டுவந்து, கடந்த ஒரு வருஷகாலமாக குழப்பத்தை உண்டாக்கியிருக்கிறார். அதோடு இப்பொழுது போடப்பட்டிருக்கும் தடைச் சட்டம் தவறு என்பது என் அபிப்பிராயம். இந்த தடை உத்திரவால் சட்டசபை அங்கத்தினர்களையும், என் சபாநாயகரையும் கூட பொதுமக்கள் இங்கு வந்து பார்க்கக்கூடாத ஒரு நிலைமை ஏற்படுகிறது."

**Mr. SPEAKER** :—"Demonstration என்றுதான் போடப்பட்டிருக்கிறது."

**Sri M. KALYANASUNDRAM** :—" இன்னொரு உத்திரவு இருக்கிறது. அமைதிக்கு பங்கம் ஏற்படக்கூடாது, அமைதிக்கு பங்கம் ஏற்படும்படி யாரும் ஒன்றும் செய்யவில்லை. போலீசார் தான் செய்கின்றனர். அப்படி இருக்கும் இந்த தடை உத்திரவை ஒதுக்கி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்."

**Mr. SPEAKER** :—" The adjournment motion refers to a matter which comes under day-to-day administration of the Government. I therefore rule the motion out of order." 9-10 a.m.

## III.—ANNOUNCEMENT BY THE SPEAKER *RE* MESSAGES FROM THE COUNCIL.

**Mr. SPEAKER** :—" I have to announce to the House that I have received the following messages, dated 15th May 1954, from the Hon. Chairman, Madras Legislative Council :—

' (1) In accordance with rule 112 of the Madras Council Rules, I return the Madras General Sales Tax (Second Amendment) Bill, 1954 (L.A. Bill No. 20 of 1954), as passed by the Council on the 15th May 1954 without any recommendation and signed by me.

(2) In accordance with rule 112 of the Madras Council Rules, I return the Madras Medium Cotton Mill Cloth (Sales Tax) Bill, 1954 (L.A. Bill No. 21 of 1954), as passed by the Council on the 15th May 1954, without any recommendation and signed by me. ' "